4.3.2025
COS No,6/2023
வா.சா.1 கௌதம் த/பெ. கோபிநாதன்

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா கடன் MS ME கடன் என்றால் சரிதான். MS ME கடனை தனி நபருக்கு கொடுப்போமா அல்லது நிறுவனத்திற்கு கொடுப்போமா என்றால் இருவருக்கும் கொடுப்போம். முதல் பிரதிவாதி ஒரு நிறுவனம் ஆகும். முதல் பிரதிவாதி தனி நபராக தான் கடன் வாங்கியுள்ளார். முதல் பிரதிவாதி UAM பதிவு செய்துள்ளாரா என்றால் வங்கி கிளையில் தான் பார்க்க வேண்டும். நாங்கன் அனுப்பிய சட்ட அறிவிப்பில் முதல் பிரதிவாதி எந்த தேதியில் கடனை செலுத்த தவறியவர் என்று சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. அந்த அறிவிப்பில் முதல் பிரதிவாதி எவ்வளவு தொகை திரும்ப செலுத்தியுள்ளார் என்ற விவரத்தை சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. எவ்வளவு தொகை திரும்ப செலுத்தியுள்ளார் என்ற விவரம் வங்கிக்கு தெரியும். தெரிந்து கொண்டே அதை வழக்குரையில் மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.6,40,000/- கடனுக்கு 21மாதங்கள் வீதம் ரூ.3,10,906/- செலுத்தியுள்ளார் என்றால் கொடுத்திருக்கிறார் சரியாக எவ்வளவு என்று தற்போது சொல்ல முடியாது. தோராயமாக அந்த தொகை இருக்கும். ரூ.1,00,000/- கடனுக்கு ரூ.42,576/- செலுத்தியுள்ளார் என்றால் தோராயமாக சரிதான். எங்களது கடன் ஒப்பந்ததத்தில் ஒரு நபர் கடனை செலுத்த தவறிவிட்டார் என்றால் எவ்வளவு நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று நிபந்தனை எதுவும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தில் ரூ.4,99,292/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கில் மேற்சொன்ன தொகையை விட குறைத்து சொல்லியுள்ளோம் என்றால் அதன்பின்னர் தொகை வரவு வந்துள்ளது. அந்த விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் கணக்கு அறிக்கையில் அது வெளிப்பட்டுள்ளது. முதல் பிரதிவாதி கடன் கட்ட தவறியவர் என்பதற்கான காரணம் கொரானா பெருந்தொற்று என்றால் எந்த தேதி என்று பார்த்தால் தான் சொல்லமுடியும். கடனை வசூல் செய்ய முதல் பிரதிவாதியை நாங்கள் தொடர்பு கொண்ட போது அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை என்று முதல் பிரதிவாதி சொல்கிறார் என்றால் வங்கி கிளையில் இருந்து முதல் பிரதிவாதியை தொடர்பு கொண்டு உள்ளார்கள். முதல் பிரதிவாதி கடன் செலுத்த முடியாத நிலை வந்தவுடன் ஊரை விட்டு போய்விட்டார் என்றால் தெரியாது. பொதுவாக கடன் வழங்கும் போது வங்கியில் நிரப்பப்படாத ஆவணங்களில் கையொப்பம் பெற்றுக் கொள்வார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் உயிர்ப்பிப்பு கடிதத்தில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் கையொப்பம் பெறவில்லை என்றும், அந்த தேதியில் முதல் பிரதிவாதி ஊரில் இல்லை என்றால் சரியல்ல, அதே தேதியில் தான் கையொப்பம் செய்து கொடுத்தார். இந்த கடன் இயந்திரம் வாங்குவதற்காக கொடுக்கப்பட்டது அதனால் இயந்திரங்கள் கடன் ஒப்பந்தத்தின்படி குதவை செய்யப்பட்டுள்ளது. உயிர்ப்பிப்பு கடிதம் கையொப்பம் செய்வதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு அவர் கடனை திரும்ப செலுத்த தவறியவர் என்று சொல்ல முடியுமா என்றால் ஆவணங்களை பார்க்க வேண்டும். வழக்கானது சட்டவரையறுத்த காலக்கெடுவிற்குள் தாக்கல்

செய்யப்படாத காரணத்தால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எந்த தேதியில் கடன் கட்ட தவறியவர் என்று சொல்ல முடியாததால் வட்டி விகிதம் சரியாக கணக்கீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லை எனினும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.

Sd/- G.Gowtham

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.